உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரமோதூத ஹூ பங்குனி ௴ 26 ௳ செவ்வாய்க்கிழமை [09-04-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 12

# படை நடமாட்டத்தை கிழக்கில் முடக்க முயற்சி!

## முகாம்களை விட்டு வெளியேறும் துருப்புகள் மீது விடாது புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

வடக்கைப் போன்று கிழக்கிலும் ஸ்ரீலங்காப் படையினரின் நடமாட்டத்தை முடக்கக் கூடியவகையில், விடுதலைப் புலிகள் தமது தாக்குதல்களை முடுக்கிவிட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முகாம்களை விட்டு வெளியேறும் படையினரை ஆங்காங்கு வழி மறித்து தாக்குவதன் மூலம் படையினர் நடமாட்டத்தை கட்டுப்படுத்த புலிகள் முயற்சித்து வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக முகாம்களிலிருந்து வெளியே வரும் படையினரை பல இடங்களிலும் வழிமறித்து அவர்கள் மீது நீண்ட நேரம் விடுதலைப் புலிகள் விடாது தாக்குதல் நடத்தி வருவதாக அவ்வப்பகுதியிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரி

[4-ஆம் பக்கம் பார்க்க]

### மட்டக்களப்பு வவுணதீவில்

நேற்று முன்தினம் காலை 7.15 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவிலும் முகாமை விட்டு வெளியேறிய ஸ்ரீலங்கா இராணுவப் படையினர் மற்றும் புளொட் குழுவினர் மீதும் விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தினர்.

குறிஞ்சாக்கேணி சந்தியில் வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலின் போது இராணுவத் தரப்பில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல்கள் கிடைக்கவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டக்களப்பு பதுரைச் சேர்ந்தவர்களான கிருபா [செல்லத்தம்பி அரிச்சந்திரன்], கேசவன் [மூர்த்தி] ஆகிய இரு போராளிகளும் வீரமரணமடைந்தனர். [உ]

### புல்லுமலைப் பகுதியில்

கடந்த ஞாயிறு காலை 7 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் புல்லுமலை முகாமிலிருந்து வெளியேறி காட்டுப் பகுதிக்குள் சென்ற படையினர் மீதும் விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல்களைத் தொடுத்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை 7.30 மணிமுதல் 9.15 வரை புல்லுமானேசடை என்ற இடத்தில் இந்தச் சண்டை நடந்தது

### மகிழவெட்டுவானில்

நேற்றுக் காலை வந்தாறு மூலை, முறக்கொட்டாஞ்சேனை, செங்கலடி ஆகிய முகாம்களிலிருந்து வெளியேறி மகிழவெட்டுவான் பகுதிக்குச் சென்ற படையினர் மீது சந்தனமடு ஆற்றடியில் வைத்து புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர்.

தாக்குதலையடுத்து படையினர் முன்னேற முடியாது சந்தனமடுப் பகுதியிலேயே தங்கி நிற்பதாக நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது. [உ]

### புலிபாய்ந்தகல்லில்

மட்டக்களப்பு மாவட்டம் புலிபாய்ந்தகல் முகாமிலிருந்து நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் வெளியேறிய படையினருடன் முகாமிலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் வைத்து சுமார் ஒன்பது மணி நேரம் விடுதலைப் புலிகள் மோதினர்.

காலை 6.15 மணி முதல் மாலை 3.30 மணி வரை நடந்த சண்டையை அடுத்து ஸ்ரீலங்கா துருப்புகள் பின்வாங்கி புலிபாய்ந்தகல் முகாமிலிருந்து அரை மைல் தூரத்தில் உள்ள காட்டுப் பகுதிக்குள் தஞ்சம் புகுந்தனர்.

இந்தப்படை அணி பின்னர் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் மீண்டும் முகாமிற்குள் திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

### வாகனேரி காட்டுப்பகுதியில்

மட்டக்களப்பு மாவட்டம் வாகனேரி முகாமிலிருந்து நேற்று அதிகாலை 4 மணியளவில் வெளியேறி, செங்கலை காட்டுப்பகுதிக்குள் சென்ற படையினர் மீது காட்டுக்குள் வைத்து புலிகள் தாக்குதலை நடத்தினர்.

நேற்றிரவு இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை மேற்படி படை அணி இந்தக் காட்டுப் பகுதிக்குள் இருந்து வெளியேறியதாகத் தகவல் ஏதும் கிடைக்கவில்லை. [உ]

### ஆனையிறவில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 9

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு 9 மணி முதல் முழு இரவும், பின்னர் நேற்றுக்காலை பத்து மணி முதல் நண்பகல் வரையும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி தொடர்ந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. [உ-117]

### குறிகாட்டுவானில் மோதல்

புங்குடுதீவு, ஏப். 9

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் குறிகாட்டுவான் இறங்கு துறைக்குச் சமீபமாக விசைப்படகு ஒன்றில் நயினாதீவு முகாம்படையினர் வந்தபோது, கரையிலிருந்த விடுதலைப் புலிகள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்று தெரியவருகிறது.

இரு தரப்பினரும் மாறி மாறி வேட்டுகளைத் தீர்த்ததாகவும் அதனையடுத்து படையினர் பின்வாங்கிச் சென்றதாகவும் தெரியவந்தது. [உ-131]

### முச்சந்தி முரளி



நெருக்கடி கால கண்டு பிடிப்புகளிலை எங்கடை ஆட் [illegible]

### கப்பல் புறப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப் 9

கொழும்பில் சிகிச்சைபெற வேண்டிய 45 நோயாளர்களுடன் "குமண" கப்பல் நேற்று மாலை பருத்தித்துறையில் இருந்து புறப்பட்டது. நோயாளர்களுக்கு உதவியாக ஒரு டாக்டரும், தாதி ஒருவரும் யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து சென்றுள்ளனர்.

இக்கப்பல் புறப்படுவதில் கடந்த சில தினங்களாக தடங்கல் ஏற்பட்டிருந்தது தெரிந்ததே. [உ-15]

## நொச்சிமோட்டையில் ஷெல் ஒருவர் காயம்! கடை சேதம்!!

நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் வவுனியா தாண்டிக்குளம் இராணுவத்தினர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஏவிய ஷெல் ஒன்று நொச்சிமோட்டை தரணிக்குளத்தில் விழுந்து வெடித்ததில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார். தேநீர்க்கடை ஒன்றும் பலத்த சேதமடைந்தது.

இச்சம்பவத்தில் காயமடைந்த வேலாயுதம் அந்தோணி [வயது 27] யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். [உ-15]

## தாண்டிக்குளத்தில் நேற்றும் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 9

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ முகாமிலிருந்து நேற்றும் ஆட்லறி ஷெல், 50 கலிபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் தாண்டிக்குளம் இராணுவ காவல் அரண் மீது விடுதலைப் புலிகள் "அருள் 89" ஷெல் தாக்குதல்கள் நடத்தினர்.

அதன் பின்னர் இரவு 10 மணிவரை தாண்டிக்குளம் முகாமிலிருந்து சாஸ்திரி கூழாங்குளம் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஆட்லறி ஷெல் மற்றும் 50 கலிபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இடையிடையே "பரா" வெளிச்சக் குண்டுகளும் ஏவி விடப்பட்டன.

மீண்டும் பின்னர் நேற்று அதிகாலை 3 மணி முதல் ஆறு மணிவரை இப்பகுதியை நோக்கி தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தப்பட்டன. [உ]

## சாஸ்திரி கூழாங்குளத்தில் நேற்று குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், ஏப் 9

நேற்றுக் காலையில் வவுனியா சாஸ்திரி கூழாங்குளம் மற்றும் பெரியகட்டி ஆகிய பகுதிகளில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம் பெற்றன.

காலை 7 மணியளவில் சாஸ்திரி கூழாங்குளத்தில் 2 பொம்மர்கள் நடத்திய குண்டு வீச்சில் 2 வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன.

மீண்டும் பின்னர் காலை 7.30 மணியளவில் பெரிய கட்டிப் பகுதியில் இரண்டு பொம்மர்கள் இரண்டு குண்டுகளை வீசின. இந்தத் தாக்குதலிலும் இரண்டு வீடுகள் முற்றாக நாசமாகின. [உ]

## உமி, சுண்ணாம்பு கொண்டு சிமெந்து தயாரிக்க முயற்சி

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்! பாரிய தொழிற்சாலை இல்லாமலே சிமெந்து உற்பத்தி செய்ய யாழ்ப்பாணத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உமி, சுண்ணாம்புத் தூள் என்பவற்றைக் கொண்டு குடிசைக் கைத்தொழிலாக சிமெந்தை உற்பத்தி செய்வது குறித்து பரீட்சார்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாரிய கட்டடங்களுக்கு அன்றி சிறிய வேலைகளுக்கு இந்தச் சிமெந்தைப் பயன்படுத்த முடியும் என்று பரீட்சார்த்த முயற்சியை மேற்கொண்டு வரும் கட்டடத் தொழிலுடன் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. [அ-3]

## காரைநகர் தாக்குதலில் படை அதிகாரி மரணம்!

யாழ்ப்பாணம், ஏப். 9

நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் — காரைநகர் முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில்— பாதுகாப்புப் படை அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

கொழும்பில் ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

இதற்கிடையில்—

காரைநகரில் நேற்று நண்பகலும் இரண்டு அவ்ரோ விமானங்கள் விடாது குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

நேற்று முழுவதும் காரைநகர் கடற்படை முகாமிலி

[4-ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஆரம்ப சுகாதார வழிகாட் பேராசிரியர் த. இராமதாஸ் F. R. C. P., D.C.H. [குழந்தை வைத்தியத்துறை, மருத்துவ பீடம்] எழுதியது: கல்லூரி, நூலகங்கள் மற்றும் முதலுதவி, போன்ற அனைத்து சுகாதாரப் பகுதியாளர்களுக்கும் ஓர் அரிய புத்தகம். வெளியீடு: உதயன் வெளியீட்டகம்; விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி/4822]

### புத்தக விற்பனை

English Practice Through Tamil Medium தமிழ் மூலம் ஆங்கிலப் பயிற்சி ஆண்டு 10, 11க்குரியது. ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஒரு அரிய கைநூல். ஆறு வருடங்களுக்குரிய G. C. E. [O/L] பயிற்சிகள் அடங்கியது. விலை ரூபா 20/- வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். ஆசிரியர் M. K. தில்லைமோகன். விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [இ/5934]

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும், வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத் தன்மைகளுக்காக 9 வகை மூலிகைகளினால் தயாரிக்கப்பட்டது. கிடைக்கும் இடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [4002]

### நாவல்கள் இலவசம்

வித்தியாசமான கதைகளில் கருத்தில் சிறந்த நாவல்களான மீரா வெளியீடுகள் 140/-ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/-ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா கன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும். [16357]

கணித, விஞ்ஞான

## A/L 91 & 92

புதிய பகுதிகள் ஆரம்பம்

09 - 04 1991

செவ்வாய் காலை 6-30

விபரங்களுக்கு:

**Personal New Science Centre,**

Elilakam Front Lane, Jaffna.

[4006]

## Air Compressor

காற்று அமுக்கி

அலுவலகம் ஒன்றில் பாவனைக்காக காற்று அமுக்கி ஒன்று தேவை. வைத்திருப்பவர்கள் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

முகாமையாளர்,
நியூ உதயன்
பப்பிளிக்கேசன்ஸ்,
யாழ்ப்பாணம்,

[இ/5935]

### ரூ. 1,000 அபராதம்

பாணில் இரண்டு ரூபா இலாபம் வைத்து விற்ற வர்த்தகர் [ரூபா ஆயிரம் அபராதம் செலுத்தினார்.

இச்சம்பவம் கடந்த வாரம் நாவற்குழியில் இடம் பெற்றது. [இ-117]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
05 - 03 - 1926

மறைவு:
10 - 03 - 1991

## அமரர் R. M. தியாகராஜா

[Formerly Ministry of Health]

அன்பின் திருவுருவாய், அறிவின் சுடரொளியாய், பாசத்தின் உறைவிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து திடீரென எங்கள் எல்லோரையும் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்திவிட்டு இறைவனிடம் சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தி அடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'ராஜ்மஹால்',
சித்தன்கேணி.

[16381]

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
03 - 08 - 1927

மறைவு:
07 - 04 - 1983

திதி:
09 - 04 - 1991

அமரர்

## நாகலிங்கம் வேலாயுதம் (துரை)

சீரான சிந்தையையும், சிரித்த உங்கள் இன் முகத்தையும் எங்களால் மறக்க முடியவில்லை. அன்பும், பண்பும், பாசமுமாய் எம்மை வளர்த்து பாதி வழியில் பிரிய முடியாமல் பிரிந்து விட்டீர்களே! எட்டாண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்மை வாட்டுகின்றன.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சூராவத்தை,
சுன்னாகம்.

[16879]

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு:
23 - 0 - 1943

உதிர்வு:
21- 03 - 1990

திதி:
09 - 04 - 1991

அமரர்

## கனகாம்பிகை பூபாலசிங்கம்

எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
தினமும் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

'ராசா பவனம்'
8 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

[4003]

புத்தாண்டை முன்னிட்டு

## மாபெரும் மலிவு விற்பனை

# ★ ஹப்பி ரெக்ஸ்ற் ★

104, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,

★ றெடிமேட் சேட் ★ ரவுசர்
★ சேலைகள் ★ பட்டுச்சேலைகள்
★ மற்றும் புடைவை வகைகள்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

காலம்: 09 - 04 - 1991 — 13 - 04 - 1991 வரை

[16371]

# JAFFNA ENGLISH ACADEMY

## ★ ESOL

(English for Speakers of other Languages)
Weekend Batch: 4 to 5-30 p.m.

## ★ TOEFL

(Test of English as a Foreign Language)
Weekend Batch: 8 to 10 a.m.

## ★ SPOKEN ENGLISH

Weekend Batch: 10 to 11-30 a.m.
**COMMENCEMENT: 13-04-1991**

## ★ ESOL

Tuesday / Friday Batch: 4 to 5-30 p.m.
**COMMENCEMENT: 16-04-1991**

Lectures: **Kandiah Navarendran**

9, Rakka Lane, Chundikuli, Jaffna.

[C-5932]

நன்றியுடன்

# நினைவு கூருகின்றோம்



## அமரர் உவில்லியம் ஞானசிகாமணி அன்னப்பா

[இளைப்பாறிய அதிபர்,
மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை]

மலர்வு:
18 - 06 - 1918

உதிர்வு:
09 - 04 - 1990

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி, மைத்துனர்.

யாழ்ப்பாண வீதி,
மானிப்பாய்.

[சி/5937]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பொருள்களின் விவரம் தேவை

தமிழ்ப் பகுதிகளுக்கு, அங்கு வாழும் மக்களுக்கு எதிராக அரசாங்கம் பொருளாதாரத் தடை விதித்திருப்பது பத்து மாதங்கள் பழைய கதை. ஆனால் அந்த தடை குறித்து உத்தியோக பூர்வமாக எதுவும் அறிவிக்காமல், பிரகடனப்படுத்தாமல் அரசாங்கம் வெகு இரகசியமாகவும், கச்சிதமாகவும் நடைமுறைப்படுத்தி வருகிறது.

பொருளாதாரத் தடை விதித்ததை வெளிக்காட்டினால், அல்லது தப்பித் தவறி ஒப்புக்கொண்டுவிட்டால் அதனால் பல பாதகமான விளைவுகள், பாதிப்புகள் உண்டாகும் என்பது அரசாங்கத்துக்கு நன்கு தெரியும். குறிப்பாக வெளிநாடுகள் கொழும்பு அரசைக் குறைத்து மதிப்பிடவும், கீழே வைத்து நோக்கவும் தொடங்கிவிடும்.

அந்த ஆரம்பம், கொழும்பு மீது வெளிநாடுகள் அரசியல் நெருக்குதல்களையும், பொருளாதார உதவி வெட்டுதல்களையும் விதிக்க வழிகோலி விடக்கூடும் என்ற அச்சமும் அரசுக்கு உண்டு.

தனது குற்றத்தை, பாதகத் தனத்தை மறைப்பதற்காக உண்மை வெளி வந்து விடக் கூடாது என்பதில் அது வெகு கவனமாக உள்ளது. அதனால் தான், வடக்கு-கிழக்குப் பிரதேசங்களுக்கு அனுப்பப்படும் உணவுப் பொருள்கள் மற்றும் பாவனைப் பொருள்கள் குறித்து, அரசு அதிகாரிகள், நாளாந்தம் பட்டியல் போட்டுப் பிரசித்தப்படுத்துகிறார்கள்.

அத்தியாவசிய சேவைகள் நாயகம் பகுதி என்ற புதிய பிரிவு, புனையப்பட்ட புள்ளி விவரங்களை வெளியிட்டு-மாதாந்தம் அறிக்கை நூலாக வெளியிட்டு - தமிழர்களுக்கு தாராள உதவி செய்யப்படுவதாக வெளி உலகத்துக்குக் காட்டிக் கொள்கிறது! அத்தியாவசிய சேவைகள் நாயகம் பகுதியும், ஏனைய சம்பந்தப்பட்ட தரப்புகளும், தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்புவதாகத் தெரிவிக்கும் தொகையை விடக் குறைந்த அளவுப் பொருள்களே தமிழ்ப் பகுதிகளுக்குக் கைக்கு வந்து சேர்கின்றன.

கடந்த ஆறாம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெற்ற திணைக்கள அதிகாரிகள் கூட்டத்தில் இது விடயம் சரியான விதத்தில் சுட்டுக்காட்டப்பட்டது. அத்தியாவசிய சேவைகள் நாயகம் சிபாரிசு செய்யும் பொருள்களைக் கூட கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் குறைத்து விடுகிறது. பின்னர் வாகனங்களில் எடுத்து வரப்படும்போது தடுக்கப்படுகிறது.

இந்த விவரங்களை தமிழ்ப் பகுதிகளில் உள்ள மாவட்ட அரசாங்க அதிபர்கள் மாதாந்தம் வெளியிட வேண்டும். பொருளாதாரத் தடையை மறைப்பதற்காக அத்தியாவசிய சேவைகள் நாயகம் வெளியிடும் புள்ளி விவரங்களுக்கும் கைக்கு கிடைத்ததற்கும் உள்ள முரண்பாடுகளைச் சுட்டிக் காட்ட வேண்டும்.

இல்லையேல் கொழும்பில் வெளியிடப்படும் புள்ளி விவரங்கள் சரியானவை என்ற நிலைப்பாடு வந்துவிடும். அதற்கு இடமளித்தால், தமிழ்ப் பகுதி அதிகாரிகளும் அரசின் உண்மையை மறைக்கும் — ''போர்த்து மூடுதல்'' நடவடிக்கைக்கு உடந்தையானவர்கள் என்று கருதப்பட வேண்டியவர்கள் ஆகி விடுவர்!

## றோட்டரக் கருத்தரங்கு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

90 ஆம் ஆண்டு ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பு மாணவருக்கான இலவசக் கருத்தரங்கு யாழ். றோட்ரக்ட் கழகத்தினால் இன்று 9 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் பிரபலம் வாய்ந்த ஆசிரியர் குழுவினர் கலந்து கொள்கின்றனர்.

கருத்தரங்கு நடைபெறும் நாட்களில் காலை நேர விரிவுரைகள் காலை 9 மணிக்கும், பிற்பகல் விரிவுரைகள் 2 மணிக்கும் ஆரம்பமாகும். [இ-த]

## காரைநகரில் வயோதிப மாது காயம்

யாழ்ப்பாணம், ஏப். 9

காரைநகரில் நேற்று முன் தினம் காலை 8 மணியளவில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் காரைநகர் வேம்படியைச் சேர்ந்த வேதநாயகம் கமலாதேவி [வயது 52] என்ற வயோதிபப் பெண் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் முழுவதும் தொடர்ந்து அகோரக் குண்டுவீச்சு இடம்பெற்றதால், காயமுற்ற இவரை நேற்றுத்தான் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவர இயன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-15]

ப. நோ. கூ. ச. களஞ்சியங்களிலுள்ள

# உணவுப் பொருள்களின் தரம் குறித்துப் பரிசோதனை

காங்கேசன்துறை ஏப்ரல் 9

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள அரிசி, சீனி, மா போன்ற உணவுப் பொருள்கள் பாவனைக்கு உகந்தவையா என்பதைக் கண்டறியும் நடவடிக்கையில் யாழ். மாவட்ட சுகாதாரத் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

பொதுமக்களிடம் இருந்து கிடைத்த புகார்களை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாவனைக்கு உகந்த பொருள்களுடன் பழுதடைந்த பொருள்களும் களஞ்சியங்களில் ஒன்றாக வைக்கப்பட்டிருப்பதால் முழுப் பொருள்களும் பழுதடையும் ஆபத்து இருந்து வருவதாகவும், பழுதடைந்த பொருள்களை கண்டுபிடித்து அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் உணவு, மருந்து பரிசோதகர் திரு. ரி. மகாதேவன் தெரிவித்தார். [இ-68]

## 'பாஸ்' முறை தொடரும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

'யாழ்-போதனா வைத்திய சாலையில் தற்சமயம் அமுலில் உள்ள ''பாஸ்'' முறை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்'

மேற்கண்ட தகவலை யாழ்-போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் செல்வி புஷ்பா சண்முகம் தெரிவித்தார்.

நோயாளர்களைப் பார்வையிட நடைமுறையில் உள்ள ''பாஸ்'' முறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று யாழ் - செயலகத்தில் கடந்த வாரம் நடைபெற்ற கூட்டமொன்றில் முடிவு செய்யப்பட்டிருந்தது.

ஏதாவது முறைப்பாடு கிடைக்கும் பட்சத்தில் பாஸ் முறையை மறுபரிசீலனை செய்வது குறித்து முடிவு செய்யலாம் என்றும் அவர் தெரிவித்தார். [இ-3]

## ஹெலித் தாக்கு!

வவுனியாவில் மன்னார் வீதியில் உள்ள நான்காம் கட்டைப் பகுதியில் நேற்றுக் காலை 9 மணி முதல் ஹெலியிலிருந்து 50 கலிபர் தாக்குதல்கள் நடத்தப்பட்ட வண்ணம் இருந்தன. [உ]

## குர்டிஷ் இனப் பிரச்சினை ஐ. நா. விவகாரமாகிவிட்டது

வாஷிங்டன், ஏப்ரல் 6

குர்டிஷ் பிரச்சினை ஈராக்கின் உள்நாட்டு விவகாரம் என்றாலும், பெரும் எண்ணிக்கையில் அகதிகள் அயல் நாடுகளில் தஞ்சமடைவதால் அது ஐ நா. வின் விவகாரமாகிவிட்டது.

ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நேற்று செய்தியாளர்களிடம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

குர்டிஷ் மக்களின் துன்பங்களுக்கு முடிவுகாண ஐ. நா. எடுக்கும் நடவடிக்கையை ஈராக் ஜனாதிபதி ஏற்றுக் கொள்ள மறுப்பின் அவர் மீது நிர்ப்பந்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு புஷ் சொன்னார்.

இதனிடையில் குர்டிஷ் அகதிகளுக்கு உதவுவது பற்றி விரிவான திட்டம் ஒன்றைச் செயற்படுத்த ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாடு நடைபெறவிருக்கிறது. [இ-எ]

## வட ஈராக்கை பாதுகாப்பு பிரதேசமாக்க முயற்சி

வாஷிங்டன், ஏப்ரல் 9

ஈராக் இராணுவத்தின் அடக்குமுறை நடவடிக்கைகளில் இருந்து உயிரைக் காப்பாற்ற தப்பி அயல் நாடுகளுக்கு ஓடும் லட்சக்கணக்கான குர்டிஷ் அகதிகளை பாதுகாக்க, ஐ. நா. வின் அமைதிகாக்கும் படையைப் பயன்படுத்துவது பற்றி அமெரிக்கா தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

இது குறித்து ஏனைய நாடுகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி வருவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நேற்றுத் தெரிவித்தார்.

இதேவேளை - வடக்கு ஈராக்கை பாதுகாப்பான பிரதேசமாக ஐ. நா. பிரகடனம் செய்து, அங்கு அயல் நாடுகளில் தஞ்சமடைந்துள்ள குர்டிஷ் மக்களை மீளக்குடியமர்த்தி ஐ. நா. வே பராமரிக்க வேண்டும் என்று துருக்கி ஜனாதிபதி யோசனை தெரிவித்துள்ளார்.

வடக்கு ஈராக் பிரதேசத்தை ஐ. நா. தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்று துருக்கி ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

இந்த யோசனையை ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் ஏற்க மறுக்கும் பட்சத்தில் அவர் மீது ஐ. நா. நிர்ப்பந்தம் செலுத்த வேண்டும் என்றும் துருக்கி கோரியுள்ளது.

இதனிடையில் காடுகளிலும், மலைகளிலும் தஞ்சமடைந்துள்ள குர்டிஷ் மக்களுக்கு உதவுவதற்காக அமெரிக்கப் போர் விமானங்கள் உணவு மற்றும் பொருள்கள் அடங்கிய பொட்டலங்களை வானில் இருந்து போடும் பணி தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

## ப. நோ. கூ. ச. முகாமையாளர் நால்வர் சுட்டுக் கொலை!

### திருமலை மாவட்டத்தில் சம்பவம்

திருகோணமலை மாவட்டம் நிலாப்பொளையில் இராணுவத்தினரால் முகாமுக்கு அழைக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர்கள் நால்வர் பின்னர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனராம்.

கடந்த மாத இறுதியில் இச்சம்பவம் நடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராமச்சந்திரன் [கங்குவேலி], நவரட்ணம் [கங்குவேலி], குமார் [புளியடிச்சேனை], மாணிக்கராசா [பள்ளிக்குடியிருப்பு] ஆகிய நான்கு பேருமே மூதூர் அரச நெல் களஞ்சிய சாலையில் உள்ள இராணுவ முகாமில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ]

## கட்டுநாயக்காவில் நேற்று சீக்கியப் பிரசை கைது!

வெளிநாட்டுக் கரன்ஸிகளை, சுங்கத் திணைக்களத்திடம் பிரகடனப் படுத்தாமல் எடுத்துச் செல்ல முயற்சித்தாகக் கூறப்படும் சீக்கியப் பிரசை ஒருவர் நேற்று கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து இரகசியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

சிங்கப்பூரில் இருந்து அந்த பிரசை கொழும்புக்கு வந்து திரும்பும்போது கைது செய்யப்பட்டார். [உ-எ]

## ஜி. சீ. ஈ. உயர்தர விசேட பரீட்சை: பாடசாலைகளுக்கு அருகே தாக்குதல் இடம்பெறாதாம்!

இம்மாத இறுதியில் வடக்கு-கிழக்கில் நடைபெறவிருக்கும் ஜி. சி. ஈ. உயர்தர விசேட பரீட்சையின் போது பரீட்சை நிலையங்களாகச் செயற்படவிருக்கும் பாடசாலைகளின் கட்டடங்களுக்குச் சமீபமாக தாக்குதல் நடத்தப்படமாட்டாது:

—இவ்வாறு பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் கல்வி அதிகாரிகளிடம் உறுதி தெரிவித்திருக்கிறார்களாம்,

பரீட்சைக் காலத்தில் பாடசாலைக் கட்டடங்களுக்கு மிக அருகில் தாக்குதல் நடத்தப்படமாட்டாது என்றும்—

படையினர் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டால் மட்டும் தற்பாதுகாப்புக்காகப் படையினர் திருப்பித் தாக்குவர் என்றும்—

பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுக்கும், கல்வி அதிகாரிகளுக்கும் இடையே இணக்கம் ஏற்பட்டிருப்பதாக அறிய வந்தது.

இது குறித்து லண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின் பிரமுகர் கருத்துத் தெரிவிக்கையில்—

''பரீட்சை நடப்பதற்கு தாமும் ஒத்துழைப்பு நல்குவோம் ஆனால் இராணுவத்தினர் தாக்குதலில் இறங்கினால் தாமும் திரும்பித் தாக்க வேண்டி வரும்''—என்று கூறியதாக பி. பி. ஸி. அறிவித்தது பரீட்சை நிலையங்களில் வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிடப்படும் என்றும்—

பரீட்சை வினாத்தாள்களை எடுத்துச் செல்ல செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவும், இறுவர் பாதுகாப்பு நிதியமும் உதவும் [illegible]

## குவைத்தில் அடுத்த ஆண்டு சுதந்திரப் பொதுத் தேர்தல்

குவைத்தில் அடுத்த ஆண்டு சுதந்திர நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் நடத்தப்படும்.

குவைத் மன்னர் எமிர் அல்சபா முன்கண்டவாறு சொன்னார். நாடாளுமன்றத் தேர்தல் அடுத்த ஆண்டில் எப்போது நடாகும் என்பதை மன்னர் திட்டவட்டமாகச் சொல்லவில்லை.

இதுகுறித்து எதிர்க்கட்சிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளன. [இ - எ]

## அமெ. படைகள் விரைவில் வளைகுடாவிலிருந்து வாபஸ்

### ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவிப்பு

ஹூஸ்டன், ஏப். 9

வளைகுடாவில் உள்ள அமெரிக்கப் படைகள் இன்னும் சில தினங்களில் தாயகம் திரும்பி விடும்; படை வாபஸ் வாரக் கணக்கில் இழுபடாது

ஹூஸ்டனில் நேற்று நடந்த செய்தியாளர்கள் கூட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இவ்வாறு அறிவித்தார்.

ஈராக்கின் உள்நாட்டு விவகாரத்தில் அமெரிக்கா சம்பந்தப்படாது என்றும் ஜனாதிபதி புஷ் சொன்னார்.

குவைத் - ஈராக் எல்லைப் புறக் கண்காணிப்பை ஐ. நா. அமைதிப்படை பொறுப்பேற்றதும் அமெரிக்கப் படைகள் வாபஸ் வாங்குவது ஆரம்பமாகும் என்றும் திரு. புஷ் சொன்னார்.

ஐ. நா. வின் நிரந்தர யுத்த நிறுத்த நிபந்தனைகளை ஈராக் வேறுவழியின்றி ஏற்றுக்கொண்டது தெரிந்ததே. [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## தனபாக்கியம் ஆறுமுகராஜா

திருமதி தனபாக்கியம் ஆறுமுகராஜா 06-04-1991 இல் காலமானார். இவர் திரு. க. அரியகுட்டி, காலஞ்சென்ற திருமதி மா. அரியகுட்டியின் அன்பு மகளும், திரு. சு. ஆறுமுகராஜா [ஓய்வுபெற்ற இலிகிதர்] அவர்களின் அன்பு மனைவியும், திரு. ஆ. இராமச்சந்திரன் [டாக்டர் அவிசாவளை], திரு. ஆ. பாலச்சந்திரன் [ஆசிரியர், யாழ். மத்தியகல்லூரி], செல்வி ஆ. ஞானேஸ்வரி [மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09 - 04 - 1991 காலை 10-00 மணியளவில் வில்லூன்றி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
சு. ஆறுமுகராஜா [கணவன்]
இல. 196, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். [16387]

## திருமதி
## செல்லத்துரை சின்னத்தங்கம்

திருமதி செல்லத்துரை சின்னத்தங்கம் 8-4-91 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கந்தப்பு செல்லத்துரை மூளாய் றோட் கூப்பன் கடை உரிமையாளரின் அன்பு மனைவியும், செ. சோமசுந்தரம் [சடயன் கடை], செ. கனகசபாபதி [உதவி அரசாங்க அதிபர், ஒட்டிசுட்டான்], செ. சிவராமலிங்கம் [உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், யாழ்ப்பாணம்], வாலாம்பிகை, நாகேஸ்வரி, சரஸ்வதி, கமலாம்பிகை [ஆசிரியை, பாலஷயூர் சென், அந்தனீஸ் பாடசாலை] ஆகியோரின் அன்புத் தாயாரும், இ. நாகலிங்கம் [தபாலதிபர், யாழ்ப்பாணம்], மு. கந்தையா [T. A யாழ்ப்பாணம்], பாலகிங்கம் [உரிமையாளர், சம்பந்தன் பார்மசி, சுண்டிக்குளி], தேவமகேஸ்வரன் [உணவு இலாகா, கிளிநொச்சி], இராசேஸ்வரி, க. இராசேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
A.D மூளாய் றோட், செல்லத்துரை சோமசுந்தரம்
சுண்டிக்குளி [16325]

## திருமதி
## செல்லம்மா சண்முகநாதன்

திருமதி செல்லம்மா சண்முகநாதன் 8 - 4 - 91 இல் காலமானார்.

இவர் காலம் சென்ற ஆசிரியர் இளையதம்பி சண்முகநாதன் அவர்களின் அன்பு மனைவியும் தங்கவடிவேல் [சவுதி], இரத்தினவடிவேல் [இலங்கை மின்சார சபை சுன்னாகம் மின் அத்தியட்சகர்], சோதிவடிவேல் [சவுதி], இன்பவடிவேல் [மேற்கு ஜேர்மனி], யோகமங்களம், யோகாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும் அருணாசலம் [நீர்ப்பாசனத் திணைக்களம் வவுனியா], ஸ்ரீமுருகானந்தன் [சவுதி], சிவனேஸ்வரி, தயாபதி, மாலா ஆகியோரின் மாமியாரும் ஆவர்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் மல்லாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் 9 - 4 - 91 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறும். உற்றார், நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
புகையிரதவீதி அருகாமை ச. இரத்தினவடிவேல்
மல்லாகம் [16391]

## திருமதி
## தெய்வானைப்பிள்ளை திருநாவுக்கரசு

சுழிபுரம் வழக்கம்பரையைச் சேர்ந்த திருமதி தெய்வானைப்பிள்ளை திருநாவுக்கரசு 8 - 4 - 91 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற திருநாவுக்கரசு [தலைமை ஆசிரியர் சுழி: விக்டோரியா கல்லூரி] வின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகேஸ்வரி, மகேஸ்வரி, இராஜேஸ்வரி, நடேசபிள்ளை [வருமானவரி இலாகா பரிசோதகர் கொழும்பு, நடேசபிள்ளை அன் கோ யாழ்ப்பாணம்] பரமேஸ்வரி, இரத்தினேஸ்வரி, நடேசலிங்கம், [இத்தாலி], புவனேஸ்வரி ஆசிரியை, இந்தியா], நடேஸ்வரன் [மணிக்கூடு திருத்துனர்] ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற அப்புத்துரை [டாக்டர்], பொன்னுத்துரை, காலஞ்சென்ற நவரத்தினம், கேமலதா, காலஞ்சென்ற இராசரத்தினம், வீரசிங்கம், செல்வரத்தினம், சிவராசா [ஆசிரியர் கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 9 - 4 - 91 இன்று காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
வட்டு கிழக்கு, சுழிபுரம். [16321]

# இருதரப்பு பேச்சு

புதுடில்லி, ஏப். 9

இலங்கை, இந்திய வெளியுறவு செயலாளர்கள் மட்டப் பேச்சுக்கள் நேற்று புதுடில்லியில் ஆரம்பமாகின.

இந்திய வெளியுறவுச் செயலாளர் மூச்குந்த் துபேயும் இலங்கை வெளியுறவுச் செயலாளர் பேர்னாட் திலகரத்னாவும் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் தனித்து அரை மணி நேரம் தங்களுக்குள் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். [உ-எ]

# இந்தியத் தேர்தல் நடக்கும் திகதி

புதுடில்லி, ஏப்ரல் 8

இந்தியாவின் பத்தாவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்கள் —

மே 18, 21, 24 அல்லது மே 19, 22, 25 அல்லது மே 20, 23, 26 ஆம் திகதிகளில் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இம் மூன்று தொகுதித் திகதிகளில் எந்தத் திகதித் தொகுதியில் தேர்தல்கள் நடத்தப்படும் என்பது பற்றிய இறுதி முடிவு அடுத்த சில தினங்களில் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

# வன்செயல் வெடிக்கும்!

புதுடில்லி, ஏப் 9

நடைபெறவிருக்கும் இந்தியாவின் பத்தாவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின் போது வன்செயல்கள் ஒன்றுமேயில்லாத அளவு இடம்பெறக்கூடும் என்று தேர்தல் ஆணையாளர் டி. என் சேஷன் நேற்று எச்சரிக்கை விடுத்தார்.

தேர்தலின் போது இராணுவம் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படுமா என்ற கேள்விக்குப் பதிலளிக்க அவர் மறுத்துவிட்டார்.

# வெளிவாரிப் பட்டப்படிப்பு

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பயிற்சி நெறி செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

சகல பீடங்களிலும் இந்தப் பயிற்சி நெறியை ஆரம்பிக்க பல்கலைக்கழக மானியக்குழு அனுமதி வழங்கியபோதும், கலைப்பீடத்திலேயே முதலில் இந்த நெறியை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. [இ - 3]

## காரைநகர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ருந்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

விமான மற்றும் ஷெல் தாக்குதல்களினால் காரைநகரில் மக்களின் வீடு, வாசல்கள் மற்றும் உடைமைகளுக்கு பேரழிவு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. [உ- 28]

## படை நடமாட்ட...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

விக்கின்றன.

படையினர் தாராளமாக நடமாடிவரும் பகுதிகளிலும் புலிகள் நீண்ட நேரம் தாக்குப்பிடித்து நின்று தாக்குதல் நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல்களினால் இழக்கிலும் படையினர் பெரும் நெருக்குதல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டம் அட்டவளை, பனிச்சங்கேணி, ஆலையடிவேம்பு, வானாறு, அம்பாறை 16 ஆம் கொலனி ஆகிய பகுதிகளில் படையினரை வழிமறித்து புலிகள் [illegible] செய்தி நேற்று வெளியாகியிருந்தது தெரிந்ததே. [உ]

# போராளிகள் எட்டுப் பேரின் புகழுடல்கள் ஒப்படைப்பு

கடந்த வியாழனன்று மாளை பம்பைமடுவில் இடம்பெற்ற மோதலில் வீரமரணமடைந்த 8 போராளிகளின் புகழுடல்களே ஸ்ரீலங்கா படையினரால் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

கடந்த சனியன்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் இந்தப் புகழுடல்களை ஸ்ரீலங்கா படையினரிடம் பொறுப்பேற்று தாண்டிக்குளம் பகுதிகளில் வைத்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர்.

இந்த மோதலில் வீரமரணமடைந்த எட்டுப் போராளிகளின் விவரம் வருமாறு:-

★ கப்டன் ஜெயகாந்தன் [கு. மகேந்திரன்—மல்லாவி]
★ இரண்டாவது லெப்டினன்ட் ஸியாந்தன் [ரவிச்சந்திரன்—வவுனியா]
★ கிருபன் [க. சைமன்—வவுனியா]
★ தாமு [பொன்னையா ஜெயராசா—வவுனியா]
★ கபில்தேவ் [மு: சிவபாலன்—வவுனியா]
★ தனேந்திரன் [எம்: பன்னீர்ச்செல்வம்—மாத்தளை]
★ ஸியாத் [ப. பரமேஸ்வரன்—வவுனியா]
★ முகுந்தன் [மு: சசிகுமார்—வவுனியா]

## கணவனுடன் வாழ நினைத்து

# வெளிநாடு சென்ற பெண் இரு பிள்ளைகளுடன் பலி!

பிரான்சில் வசிக்கும் தமது கணவனைச் சந்திக்கச் சென்ற மனைவி ஜேர்மனியில் விபத்தில் பலியானார். அந்தப் பெண்ணின் இரு பிள்ளைகளும் அதே விபத்தில் மரணமானார்கள் எனத் தகவல் கிடைத்துள்ளது

கடந்த வாரம் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஊரங்குனையை சேர்ந்த ஒரு பெண் தமது இரு பிள்ளைகளுடன் பிரான்சில் உள்ள தமது கணவனைச் சந்தித்து அங்கு வாழ்வதற்காகப் சென்றார்.

பிரான்ஸ் செல்வதற்கு முன்னர் மேற்கு ஜேர்மனியில் தங்கிய அந்தப் பெண், அங்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த உறவினர் ஒருவரை பார்ப்பதற்காக காரில் சென்ற சமயமே அந்தக் கார் விபத்தில் சிக்கியது.

அவரும், அவரது இரு பிள்ளைகளும், அவர்களுடன் பயணம் செய்த மற்றும் உறவினர்கள் மூவரும் பலியானார்கள். [அ-3]

# இங்கிருந்து 24 டாக்டர்கள் வெளி மாவட்டங்களுக்கு!

யாழ்ப்பாணம், ஏப் 9

யாழ்- போதனா வைத்தியசாலையில் உள்ளகப் பயிற்சி பெற்று வந்த டாக்டர்கள் எதிர்வரும் 15 திகதி முதல் நியமனத்துடன் இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளனர்.

யாழ்- மருத்துவ பீடத்தில் இருந்து சித்தியடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் மொத்தம் 27 டாக்டர்களுக்கு சுகாதார அமைச்சு நியமனம் வழங்கி உள்ளது

இவர்களில் 24 பேர் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பல மாவட்டங்களிலும் உள்ள வைத்திய சாலைகளுக்கும் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளுக்கும் நியமனம் பெற்றுள்ளனர். [அ-3]

## அறிவித்தல்

சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கத்தால் ''சுதேசியன்'' எனும் பத்திரிகை வெளியிடப்பட உள்ளது. இதற்கு மருத்துவ சம்பந்தமான ஆக்கங்கள், வைத்தியர்கள், வைத்தியத் துறையுடன் சம்பந்தப்பட்டவர்கள் மற்றும் ஆர்வமுள்ள எழுத்தாளர்களிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகிறது. இவ் ஆக்கங்கள் 12ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்குமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

பத்திராதிபர்,
சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கம்,
த. பெ. இல. 2,
கண்டி றோட்,
கைதடி.

[16322]

# மரண அறித்தல்

## திருமதி சரஸ்வதி காராளசிங்கம்

திருமதி சரஸ்வதி காராளசிங்கம் காலமாகிவிட்டார்.

அன்னார் காராளசிங்கத்தின் மனைவியும், திரு. திருமதி சின்னத்தம்பி நல்லம்மாவின் மகளும், இளைப்பாறிய A. G A. பாலறட்ணத்தின் அன்புச் சகோதரியும், மனோகரன், மஞ்சுளா, றூபவதி, சுதாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயரச்சனின் அன்பு மாமியாருமாவார்.

ஈமக்கிரியைகள் 9-4-91 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணியளவில் நாவலடி ஒழுங்கை மானிப்பாயில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
நாவலடி ஒழுங்கை, காராளசிங்கம்
மானிப்பாய். [16323]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிரைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09 - 04 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org